24 மார்ச் 2024
ஆண்டவருடைய திருப்பாடுகளின்
குருத்து ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

# newbec

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**
ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்
திருஅவையாக பாஸ்கா மறைபொருளை வாழ்தல்

# கடவுளுக்கான பேரார்வத்தால் புதுப்பிக்கப்படுங்கள்

இன்றைய திருவழிபாடு, இயேசு எருசலேமுக்கு மாட்சியோடு நுழைவதை மீண்டும் காட்சிப்படுத்துவதன் மூலம் தொடங்குகிறது. நமது கரங்களில் குருத்தோலைகளை ஏந்தி மகிழ்ச்சி கீதம் பாடுகிறோம். ஆனால் இன்றைய முதல் வாசகம் எசாயா அதிகாரம் 50 இல் நாம் வாசிக்கும் துன்புறும் ஊழியன் என்ற வாசகமும் தொடர்ந்து பவுல் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தையும் வாசிக்கும்போது சற்று நிதானிக்கவேண்டி இருக்கிறது. நற்செய்தியை வாசிக்கும்போது, புனித வாரம் தொடங்கிவிட்டதை நம்மால் உணர முடிகிறது.

*சிலுவை என்பது விண்ணகத்திற்கான வழி. ஆனால் அதை முழு விருப்பத்துடன் சுமக்கும்போது மட்டுமே சாத்தியம்.*
— புனித சிலுவையின் பவுல்




கடந்த ஐந்து வார தவக்கால தயாரிப்புகளும் புனித பவுலின் கடிதமும் நம்மை இந்த தருணத்துக்கு கொண்டுவந்துள்ளது. கடவுளின் வடிவில் விளங்கிய கிறிஸ்து தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். கிறிஸ்து நம்மேல் வைத்த அன்பின் ஆழம் தான் இந்த நிகழ்வின் மையத்தின் காரணம்.

இயேசுவின் பாடுகளை விவரிக்கும் மாற்கு நற்செய்தியாளர், இயேசு தனது மரணம் முன்னரே தீர்மானிக்கப்பட்டது என்று அறிந்துள்ளதைக் காட்டுகிறார். மேலும் அவரது தந்தையின் விருப்பத்துக்கு கீழ்ப்படிவது, அவரை சிலுவைச் சாவுக்கு அழைத்துச் செல்கிறது. அவருக்கு முன் சீடர்கள் இருக்கிறார்கள். அவர்களின் உள்ளத்தை அவர் அறிந்துள்ளார். பேதுரு அவரை மூன்று முறை மறுதலிக்கப் போகிறார். யூதாசு அவரைக் காட்டிக்கொடுப்பான் என்பதையும் அறிந்துள்ளார்.

இதை ஒரு சவாலாக நாம் பார்க்கிறோமா? இயேசு நம் ஒவ்வொருவர் மீதும் அவரின் பார்வையைத் திருப்பும்போது, நாம் அவரைப் பார்ப்போமா? திருத்தந்தை பிரான்சிஸ் இயேசுவின் பார்வையைப் பற்றி நமக்கு ஒரு புதிய விளக்கத்தைக் கற்பிக்கிறார். நாம் யாரைப் பார்த்தாலும், நம் பார்வை யாரிடம் இருந்தாலும், அன்பைப் கொடுப்பவராக நம் பார்வை அமையவேண்டும். அனைத்தும் பார்வையில் இருந்து தான் தொடங்குகிறது. இயேசு குணங்களைப் பார்க்கவில்லை. பெயர்களைத் தான் பார்க்கிறார். பாவத்தைப் பார்த்து அங்கேயே நின்றுவிடவில்லை. மனிதர்களைத் தான் பார்க்கிறார். தனிமனிதர்களைப் பார்க்கிறார். அவர் அன்பே உருவானவர். அன்புக்காக உருவாக்கப்பட்டவர் என்று உணர்ந்துகொள்ள திருத்தந்தை அழைக்கிறார்.

இந்த வாரத்தில் இறைவனின் பேரார்வத்தைப் பற்றி சிந்திக்கும்போது, நம் வாழ்வோடு நற்செய்தியை அறிவிப்போம். மேலும் இயேசு நம்மை இரக்கத்தோடும், ஆர்வத்தோடும் பார்க்கிறார். நாமும் இயேசுவின் கண்களால் மற்றவர்களையும் அன்போடும், கருணையோடும் பார்ப்போம். கடவுளுக்கான பேரார்வத்தால் நாம் புதுப்பிக்கப்படுவோம்.

புனித வாரத்தின் ஆசீர் உங்களுக்கு உரித்தாகட்டும்.

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 50: 4-7

திருப்பாடல்: 21: 8-9, 17-20, 23-24

பிலிப்பியர் 2: 6-11

மாற்கு 14: 1-15, 47

INTERNAL CIRCULATION ONLY
BUL 12/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org